The Industrial Labour Welfare Association Ltd.,
AVANASHI ROAD, :: COIMBATORE.

1966-ம் ஆண்டு நவம்பர்-மீ 26, 27 தேதிகளில்
காரைக்குடியில் நடைபெற்ற
ஹிந்தி ஆதிக்க எதிர்ப்பு மகாநாட்டில்

திரு. ஜி. டி. நாயுடு அவர்கள்

ஆற்றிய சொற்பொழிவு.

26, 27—11—1966 434

Speech by

Sri G. D. Naidu

அன்பார்ந்த தலைவர் அவர்களே, இங்கு குழுமியுள்ள இள மாணவ அறிஞர்களே, மற்றுமுள்ள பெரியோர்களே, நண்பர்களே!

முன்பு இங்கு பேசியவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். மாணவர்கள் இந்த மாதிரி கூட்டங்களிலும், அரசியலிலும் கலந்துகொள்ளுவதை முழுவதும் வெறுப்பவனாயிருந்தாலுங்கூட, ஒவ்வொருவரும் மிகவும் உற்சாகத்தோடு ஒவ்வொருவருக்கும் இருக்கும் எண்ணங்களை மிகத் தெளிவாகவும் அப்படியே பிரதிபலிக்கும்படியாக விளக்கமாகச் சொல்லுவதை இன்னும் கேட்கலாம் என்றே தோன்றுகிறது. தற்போது அரசாங்கம் செய்துவரும் மன்னிக்க முடியாத தவறுகளையும் குற்றங்களையும், திருத்த முடியாத நடவடிக்கைகளையும் நாள் முழுவதும் சொன்னாலுங்கூடத் தீராது. ஆனால் அவற்றைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்க முடியாது என்று தோன்றுகிறது.

இங்கு சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். அரசாங்கத்திலுள்ளவர்கள் நாளுக்கு நாள் ஒரே விஷயத்தை திரித்துக் கூறிக்கொண்டு வருகிறார்கள். இதுவே போதும் அவர்கள் தோல்வியைக் காட்டுவதற்கு. கடந்த நான்கு மாதங்களில் மிக முக்கியமான உணவு விஷயத்தைப்பற்றி பொறுப்புள்ள மந்திரிகளும் மேலதிகாரிகளும் சொன்னவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

பேரிகை – (7—11—66)

காங்கிரஸ் சர்க்காரில்தான் அதிகாரிகளுக்குப் பஞ்சம் இல்லையே!

ஒவ்வொரு இலாக்காவிலும் மந்தை மந்தையாக மந்திரிகள், உதவி மந்திரிகள், காரியதரிசிகள் என எத்தனை எத்தனையோ உண்டே. உணவு இலாக்கா அதிகாரிகள் மூலைக்கொருவராய் நாளுக்கொரு விதமாய், இடத்துக்கொரு பேச்சாய் பேசி உளரிக் கொட்டுவதை இதோ பாருங்கள் :

ஜூலை, 13 – பம்பாய்.

உணவு மந்திரி சுப்பிரமணியம் – நடப்பு ஆண்டு 1965 ஐ விட எவ்வளவோ தேவலை.

ஜூலை, 16 – புதுடில்லி.

உணவு இலாக்கா உதவி மந்திரி கோவிந்த மேனன் – உணவு நிலை நெருக்கடியானதுதான் என்றாலும் கட்டுமீறிப் போகவில்லை.

ஆகஸ்டு, 30 – பெங்களூர்.

கோவிந்த மேனன் – அடுத்த அறுவடை சகஜமாக உள்ள அளவுக் குறையாது.

செப்டம்பர், 1 – திருவனந்தபுரம்.

கோவிந்த மேனன் – கோடைகாலப் பயிர் சகஜமான அளவிருக்கும். அரிசி மற்ற உணவுப் பொருள்கள் பற்றியும் கவலைப்பட காரணமில்லை.

செப்டம்பர், 2 – புதுடில்லி.

கோவிந்த மேனன் – அடுத்த வருஷம் உணவு நிலைமை சௌக்ரியமாகவே இருக்கும்.

செப்டம்பர், 7 – புதுடில்லி.

சுப்பிரமணியம் – பட்டினிச்சாவு எங்குமில்லை. ஏதோ சில மாகாணங்களில் அரிசி நிலைமை கவலையளிப்பதாக இருக்கிறது. அந்நியச் செலாவணி நெருக்கடி மோசம்தான். என்றாலும் அதைக் கருதாமல் சாத்தியப்பட்ட அளவு அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

செப்டம்பர், 18 – புதுடில்லி.

உணவு இலாகா – அமோக விளைச்சலுக்கு அறிகுறிகள் அதிகரிக்கின்றன. 1964–65 884 லட்சம் டன்னைவிட இந்த ஆண்டு அதிக உற்பத்தி இருக்கும்.

செப்டம்பர், 21 – புதுடில்லி.

விவசாய இலாகா – கோடைப் பயிர் உற்பத்தி 95 லட்சம் டன் இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

செப்டம்பர், 28 – புதுடில்லி.

சுப்பிரமணியம் – கோடைப் பயிர்களின் நிலை திருப்திகரமாகவே இருக்கிறது. 67ல் உணவு தானிய இறக்குமதி சுமார் 80 லட்சம் டன்னாக இருக்கும்.

அக்டோபர், 12 – பம்பாய்.

சுப்பிரமணியம் – இந்த ஆண்டு பயிர்களின் நிலைமை நம்பிக்கையூட்டுவதாயிருக்கிறது. அடுத்த ஆண்டில் உணவு இறக்குமதி குறைவாயிருக்கும். 51 லட்சம் டன்னுக்கு மேல் போகாது. நடப்பு ஆண்டில் 120 லட்சம் டன்னாகும்.

அக்டோபர், 17 – சிம்லா.

சுப்பிரமணியம் – உ. பி., பீஹார், ராஜஸ்தான், மத்தியபிரதேசம் இம் மாகாணங்களில் வறட்சி ஏற்பட்டிருப்பினும் அடுத்த ஆண்டு உணவு உற்பத்தி திருப்திகரமாகவே இருக்கும். 880 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியாகும். இறக்குமதி சரிபாதியாகக் குறையும்.

அக்டோபர், 17 – புதுடில்லி.

சுப்பிரமணியம் – மொத்தத்தில் உணவு உற்பத்தி உபரியாக இருப்பினும் அடுத்த ஆண்டில் உணவு நிலைமையை சமாளிப்பது இந்த வருடத்தை விட அதிகக் கஷ்டமாயிருக்கும்.

அக்டோபர், 17 – புதுடில்லி.

சுப்பிரமணியம் – மற்ளுெரு சோதனையான காலம் நம்மை எதிர்நோக்குகிறது. இந்த வருட லட்சிய அளவான 950 லட்சம் டன் உற்பத்தி கிடைக்காது, என்ருலும் 800 லட்சம் டன்னுக்கு அதிகமாகவே இருக்கும்.

முன்னுக்குப் பின் முரணுன மேற்கண்ட உளறல் பற்றி ஏதேனும் சொல்லவா வேண்டும்? இந்த லட்சனத்தில் உணவு நெருக்கடியை எவ்வளவு வெற்றிகரமாக சமாளித்திருக்கிறேம் என்று காங்கிரஸ் சர்க்காரைப் போற்றுவாரில்லையே என பிரதம மந்திரி வயிறெரிந்து குமுருகிருர்.

உணவு நெருக்கடியை சமாளித்தப் பெருமைக்கு உண்மையில் உரியவர் பிரசிடெண்ட் ஜான்சன். 110 – 120 டன் உணவு தான்ய பிச்சையிட்ட பூமான் அவர்தான். அவரோடு பெருமையை பகிர்ந்துகொள்ள உள்ளவர்கள் ஜான்சன் உதவிய

தானியத்தை கப்பலிலும் ரயிலிலும் ஏற்றி இறக்கிய போர்ட்டர்களுமேயாவர்.

சுயபுத்தியும் அற்று சொல் புத்தியையும் ஏற்காமல் குட்டையை குழப்பி நாட்டை நாசமாக்கிய ஆட்சிக்கா உங்கள் வோட்டு என்பதைத் தீவிரமாய் சிந்திக்கவேண்டியது நமது ஒவ்வொரு இந்தியனின் கடமையல்லவா?

அரசாங்கம் ஒரு பிஸ்கட் பேக்டரிக்கு அன்னிய நாட்டுப் பங்கோடு லைசென்ஸ் கொடுத்துள்ளது. இங்கு முன்பே 40 பிஸ்கட் உற்பத்திசாலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. மேனாட்டு பிஸ்கட்டை விட உயர்ந்த ரகமாக உற்பத்தி செய்துவருகின்றன.

ஒரு காங்கிரஸ் மெம்பர் திவான் சிம்மன்லால் இப்போதுள்ள தொழிற்சாலைகள் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு 25 லட்சத்திற்கு பிஸ்கட் ஏற்றுமதியும் செய்துவரும்போது எதற்காக அதிகப்படியான செலவுடன் அன்னிய நாட்டுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது என்று கேட்டிருக்கிறார்.

அர்ஜுன் அரோரா என்னும் காங்கிரஸ் மெம்பரும் இப்பொழுது கொடுத்திருக்கும் லைசென்ஸ் நமது தேச நலனுக்கு எதிராக செய்திருக்கும் பெரிய குற்றமாகிறது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்.

மற்றொரு மெம்பர் மேலிடங்களில் லஞ்சம் விளையாடியிருக்கிறது என்று குறிப்பிட்டதற்கு, அரசாங்கம் தனி சிறப்போடு கூடிய பிஸ்கட்டுகள் செய்வதற்காக அன்னிய நாட்டுப் பங்கு சேர்க்கப் பட்டிருக்கிறதாக நொண்டி சாக்குகளை சொல்லி வருகிறது.

தவிர 90,000 கன மீட்டர்கள் செல்லுலர் கான்கிரீட் பிளாக்குகள் செய்வதற்காக ஒரு கோடி முப்பத்தைந்து லட்சம் மூலதனத்திற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 105 லட்சத்திற்கு வெளிநாட்டுக் கம்பெனியே கொடுக்கப்போகிறது. இதை ஏதோ ஒரு காலத்தில் வட்டியுடனே அல்லது லாபத்துடனே அன்னிய நாட்டு செலாவணியில் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள்.

டில்லியில் நிதி மந்திரி நம் தேசக் கடனைப்பற்றி சொல்லுகின்றார். 1966 ஆகஸ்டு முதல் தேதி இருந்த கடன் பத்தாயிரத்து நூறு கோடி. இதில் நாலாயிரத்து நூறு கோடி நாணயக் குறைப்பு செய்த மறுநாளே உயர்ந்துவிட்டது. நம் தேசத்தில் கறுப்புப் பணமே பத்தாயிரம் கோடி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த பத்தாயிரம் கோடியைக் கண்டுபிடித்தால் நமது தேசக் கடனே ஒழிந்து போகும். இதற்காக சென்ற மாதக் கடைசிவரை 128 இடங்களில் திடீர் சோதனை செய்திருக்கிறார்கள். எவ்வளவு கண்டுபிடித்தார்களென்று தெரியவில்லை. எப்படியும் 5 சத விகிதத்திற்குமேலிருக்காது. இம் மாதிரி சோதனைகளினால் வீண் வெகுளியும் சண்டைகளும் அவநம்பிக்கைகளும்தான் உண்டாக்குகிறார்கள்.

ஒரு கஷ்டமுமின்றி கறுப்புப் பணம் முழுமையும் வெளியில் வர வழி சொன்னால் கேட்டால்தானே. கேட்பதுமட்டிலும் கிடையாது.

இதைத் தவிர உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யும் நிலங்களில் கரும்பு பயிர் செய்து சர்க்கரையை மிகக் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்கிறார்கள்.

பஞ்சு இறக்குமதி செய்து நூலோ துணியோ உற்பத்தி செய்து மற்ற தேசங்களுடன் போட்டி போட்டு நஷ்டமடைகிறார்கள்.

இம்மாதிரி அநேகம் கள்ளமார்க்கட்டுக்கு லைசென்ஸ்கள் கொடுத்துவருகிறார்கள். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால் வெளிநாட்டு அந்நிய நாணயம் தேவையென்று சொல்லுகிறார்கள். பார்க்கப்போனால் நமக்கு வெளிநாட்டு அன்னிய செலாவணியே தேவையில்லை. எந்தவிதமான இறக்குமதியும் வேண்டியதில்லை. சர்க்கரையும் துணிகளும் நஷ்டத்திற்கு குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்வதை விட அந் நிலங்களில் நமக்குத் தேவைப்பட்ட உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து நம் நாட்டுத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளலாம்.

வேண்டுமானால் நமது தேவைக்குமேலிருக்கும் சணல் சாக்குப்பைகளோ மைக்கா அபரேக் முதலிய தாது கனிப்பொருள்களோ ஏற்றுமதி செய்து அதற்கான அளவு இறக்குமதி செய்துகொள்ளலாம்.

நம் மாநிலத்தில் மட்டும் லட்சக் கணக்கில் கல்லூரிகளில் தேர்ச்சிபெற்றுவரும் மாணவர்களும் மற்றவர்களும் வேலையின்றி இருக்கும்போது பிரம்மாண்டமான ரொட்டி பேக்டரியை கொச்சியிலும் மற்ற இடங்களிலும் திறந்துவைக்கிறார்கள்.

கதர்த்துணி கைத்தரித் துணிகளும் தேங்கிக் கிடக்கும்போது இன்னும் 10 – 15 நூற்பாலைகளுக்கும் 12,500 விசை தரிகளுக்கும் லைசென்ஸுகள் கொடுக்கப்போகிறார்களாம்.

குருட்டுத்தனமான கன்ட்ரோல்களை ஏற்படுத்தி அதனால் ஏற்பட்ட விலை ஏற்றத்தை தடுக்கிறோம் என்று சொல்லி அரசாங்கம் தானிய வியாபாரத்தை ஆரம்பித்து பின்னும் அதிக விலையேற்றத்தோடு பிரம்மாண்டமான அரிசி மில்களையும் வைக்கப் போகிறார்கள்.

இப்போது இருக்கின்ற அரிசி மில்களை நிறுத்தி விட்டு கைக்குத்தல் அரிசியே உபயோகிக்கவேண்டும் என்று செய்திருந்தால் இப்போதிருக்கும் வேலை இல்லாத் திண்டாட்டங்களில் பாதிக்குமேல் குறைந் திருக்கும்.

கைக்குத்தல் அரிசியில் பாதி வியாதிகளும் குறைந்திருக்கும்.

இன்னும் அந்நிய நாட்டு வியாபார ஒப்பந்தம் (collaboration) என்னும் பேரில் நம் ரத்தத்தை உறிஞ்சி வெளிநாடுகளுக்கு ஜெட் பம்புகள் வைத்து வெளியேற்றுகிறார்கள்.

மற்றும் வெளிநாடுகளிலிருந்து சாதாரண பிட்டர்களும் எண்ணெய் ஊற்றுகின்ற ஆயிலர்களை யும் என்ஜினியர்கள் என்று கொண்டுவந்து நம்முடைய சாமர்த்தியமுள்ள என்ஜினியர்களின் தலைமேல் உட்காரவைத்து, வருமானவரிகூட இல்லாதவகையில் 4 அல்லது 5 மடங்கு அதிக சம்பளம், வாடகை இல்லாத வீட்டு வசதி இன்னும் பல சலுகைகள் கொடுத்து வேடிக்கை பார்த்துக்கொண்டு நம் நாட்டு பணத்தை விரயமாக்கி நாட்டை கடனுக்குகிறார்கள்.

டிராக் செயின் செய்வதற்காக $112\frac{1}{2}$ லட்சம் மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

3 வருஷங்களுக்கு இறக்குமதி செய்யும் சாமான்களைப் பூட்டி (assemble) செய்து உற்பத்தி செய்ய வேண்டியது. இந்த 3 வருஷங்களுக்கு வட்டிமட்டும் 30 லட்சமாகும். இந்த 30 லட்சத்தை கொண்டு நம் நாட்டு என்ஜினியர்களைக்கொண்டு சாமானங்களை செய்தால் அவ்வளவு அதிக தொகையும் வெளி நாட்டுக் கூட்டு வியாபாரமும் தேவையில்லை.

சமீபத்தில் டாக்டர் சர் ஏ. ராமசாமி முதலியார் திட்டக் கமிஷனை ஒழித்துவிடும்படி சொல்லியிருக்கிறார். ஆனால் மத்தியிலிருந்து பதவி தயவுக்காக இருப்பவர்கள் அதை ஒழிக்கக்கூடாதென்று தடுத்து வருகிறார்கள். (Planning Commission) திட்டக் கமிஷனை கலைத்துவிடவேண்டுமென்று 5 – 6 வருஷங்களுக்கு முன்பே பம்பாயில் தொழிலதிபர்கள் கூட்டத்தில் நான் சொன்னேன். ஆனால் அதை ஒருவரும் அரசாங்கத்திற்கு அப்போது எடுத்துப் போகவில்லை.

இப்போது பிளாக் டெவலப்மெண்டு என்றும் பஞ்சாயத்தென்றும், கிராம சேவகிகளென்றும், மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு என்றும் இன்னும் பல வேறிடங்களில் பணத்தை தேர்தலுக்காக செலவு செய்வதற்குப் பதில் சௌகரியமாகவும் தங்களுக்கு செலவில்லாமல் போகும் முறையில் வீண் விரயம் செய்துவருகிறார்கள்.

உதாரணமாக பஞ்சாயத்துபோர்டு ஆபீஸ் 100 ரூபாய் வாடகைக்கு இருக்கும்போது 80,000 ரூபாய் முதல் போட்டு கட்டிடம் கட்டப் போகிறார்கள்.

இன்னும் இதே மாதிரி எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் மாணவர்கள்

அரசியலில் புகக்கூடாது என்று சொல்லவந்து இன்னும் இவைகளைப் பற்றி சொல்லுவது சரியில்லை.

நீங்கள் எவ்வளவு மீட்டிங்குகள் பெரிய மகாநாடுகள் போட்டு தீர்மானங்கள் செய்து லக்ஷக் கணக்கில் கையெழுத்து வாங்கி மகஜர்கள் அனுப்பி ஞலும்கூட டில்லியில் இதற்கென்றே கட்டியுள்ள அடித்தளங்களிலுள்ள அலமாரிகளிலும் பெட்டிகளி லும் எறிந்துவிடப்படும்.

ஒரு பார்லிமெண்டு மெம்பர் 268 கடிதங்கள் எழுதியிருக்கிருர். ஆனல் அவர் காட்டிய குறைகள் நீக்கப்படவில்லை.

சட்டமும் ஒழுக்கமும் மிகவும் கெட்டுப்போய் விட்டது.

(2) The State of Law and Order in India. – (P. 16) The Current 15-10-66.

(3) டில்லியில் 7-11-66 தேதி ஒரு நாள் நடந்த கலவரங்கள். – Behar Herald. 12-11-66.

இந்தி எதிர்ப்பைப் பற்றி என்னுடைய அனு பவத்தில் உதித்த கருத்து என்னவென்ருல் மாணவர் கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்தக் கிளர்ச்சிக்கும் எந்த அரசியல் கூட்டங்களுக்கும் போகக்கூடாதென்பதுதான். இந்த முடிவை ஒரு வருஷத்திற்காவது அமுல் செய்யும்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அங்கீகரிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாணவர்களுக்கு Prof. ஆசார்ய கிருபளானியும் ஒரு அறிக்கை அறிவுரை விடுத்திருக்கிருர்.

(4) The Malabar Herald. 19-11-66 (P. 9) "Kripalani on Students".

நான் 30 – 40 வருஷங்களாக மாணவர்களுடன் பழகியதில் ஒரு முடிவுக்கு வந்தேன். அதாவது 50 வயதில் பாதி வருஷங்களுக்காவது படித்து, பாதியில் சம்பாதித்து அதை அரசியலிலோ அல்லது வேறு எந்த விஷயத்திலோ செலவு செய்யலாம். அதன் மத்தியில் அவர்கள் இம்மாதிரி விஷயங்களில் ஈடுபடுவதால் எதையும் சாதிக்க முடியாதவர்களாய் பலம் குன்றிப் போய்விடுகிறார்கள்.

இவைகளை மனதில் வைத்தே நான் நடத்திவருகின்ற ஹாஸ்டலில் மிகக் கண்டிப்பான விதிகளை வைத்து நடத்திவருகின்றேன். அதனால் 100 முதல் 150 வரை மாணவர்கள் உள்ள ஹாஸ்டலில் சென்ற 22 வருஷங்களில் 7 பேர்கள்தான் நோயினால் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார்கள். இது இந்தியாவிலேயே மிகக் குறைந்த நாட்களுக்கு ஒய்வெடுத்துள்ள குறைந்த நாட்க்ள் இங்குதான்.

ஹாஸ்டலிலுள்ள மாணவர்கள் சினிமாவுக்குப் போனால் அபராதம் கட்டவேண்டும். ஹாஸ்டலில் குப்பை போட்டால் குற்றம், ஒரு நாளைக்கு பூராவையும் சுத்தம் செய்யவேண்டும். இலையில் சாதம் விட்டுவிட்டாலும் fine. வேலைக்கு எங்காவது ஒரு நிமிஷம் தாமதமாக வந்தாலும் அபராதம். அவரவர்கள் எடை குறைந்தாலும் ஹாஸ்டலில் இருக்க முடியாது, வீட்டிற்குப் போகவேண்டியதுதான்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவ்வகை சிக்கல்களில் கஷ்டப்பட்டு இருந்து தொழில்பயிற்சி

கற்று வெளியில்போய் மிக உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள். அல்லது சொந்த தொழில்கள் நடத்திவருகிறார்கள். சிலர் வெளிநாடுகளில் நல்ல பதவிகளில் இருக்கிறார்கள்.

நான் இந்த விஷயங்களை பலவிதங்களில் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். அதனால்தான் மாணவர்களுடைய சக்தி இம்மாதிரி விரயமாவது எனக்குப் பொறுக்க முடியவில்லை.

அரசியல்வாதிகளோ மற்ற நண்பர்களோ அல்லது நீங்களோ இதைப்பற்றி ஆராயாமல் இருப்பதால் உங்களை அரசியலுக்கு இழுக்கிறார்கள். நீங்களும் இடம் கொடுக்கிறீர்கள். இதைப்பற்றித் தெரிந்திருந்தால் ஆந்திராவில் எக்கு ஆலைக்கிளர்ச்சி நடந்திருக்காது. ஆந்திரா மாணவர்கள் செய்த கிளர்ச்சியைப் பார்த்து கேரளத்திலும் கிளர்ச்சி செய்தார்கள். ஜெகதலபூர் முதலிய இடங்களிலும் கிளர்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள்.

பிரதம மந்திரி இந்திராகாந்தி நிதி உதவி கிடைத்தால் எக்கு உற்பத்தி செய்ய தொழிற்சாலை ஆரம்பிக்கக் கூடும் என்று சொல்லியபிறகு கிளர்ச்சி செய்வது தவறு.

என்னைக் கேட்டால் Steel Plant கூடாது. அதற்குப் பதில் அநேகருக்கு வேலை கிடைக்கக் கூடிய பல சிறு தொழில்கள் தேவையென்று கிளர்ச்சி செய்யலாம். ஆனால் எந்தக் கிளர்ச்சியும் மாணவர்கள் செய்யக்கூடாது. அவர்கள் இதில் கலந்தால் அவர்கள் பொருளும் உடலும் மனமும் கெட்டு பலஹீனமாகிவிடுவார்கள்.

இதைப்பற்றி குமார் என்பவர் எழுதியுள்ள கட்டுரையைப் பாருங்கள்.

(5) பேரிகை – 21-12-66 (P. 4) – "கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும்".

மாணவர் தலைவர் சீனிவாசனும் ஜெயப்பிரகாசம், ராஜாமுகம்மதுவும் மிக உருக்கமாகப் பேசி காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டுமென்று பொது மக்கள் ஒத்துழைப்பை கோரியிருக்கிறார்கள்.

(6) குறள்நெறி – மதுரை 17-11-66.

அவ்விதம் அகற்றுவதைவிட அவர்களை நமது விருப்பத்திற்கு இனங்கும்படி திருப்ப முயற்சிப்பது தான் உசிதம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்துவரும் தேர்தலில் நம் மாநிலத்தில் தமிழ் மொழி ஆட்சிமொழியாகவும் இங்கிலீஷ் பொது மொழியாகவும் செய்ய பாடுபடுவீர்களா என்று கேட்டு அதற்குச் சம்மதம் கொடுப்பவர்களுக்கு வோட்டுப் போடுவதுதான் நமது கடமை.

அதைவிட்டு இம்மாதிரி கூட்டங்கள் ஊர்வலங் கள் முதலிய கிளர்ச்சிகளால் கெடுதல்கள்தான் வரும் காங்கிரஸ்காரர்களோ திராவிட கழகக்காரரோ முன்னேற்றக்கழகக்காரரோ அல்லது கம்யூனிஸ்டு களோ ஒரு கல்லை எடுத்து எறிந்து கலகத்தை ஆரம்பித்து போலீஸை வரவழைத்து எல்லா அக்கிர மும் செய்துவிடுவார்கள்.

ஹிந்தியை நேர்முகமாகவும் குறுக்குவழிகளி லும் நுழைப்பதால் தேசிய ஒருமைப்பாடு கெட்டு

காங்கிரஸுக்கு வெந்நீர் விட்டு வேர் அறுந்துபோய் விடும் என்பதை அவர்கள் சீக்கிரம் தெரிந்துகொள்ளு வார்கள்.

இங்கிலீஷ் இருக்கவேண்டுமென்று மெயில் பத்திரிகையில் நவம்பர் 4-தேதி எழுதியதும், 'சுயராஜ்யா' வில் நவம்பர் 19-தேதி வெளிவந்துள்ள செய்திகள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

(7) "The Mail" Nov. 4, 1966 (P. 4.)

(8) Swarajya Nov. 19, 1966 (P. 25) "Let English Continue" By V. Rajaraman.

கடைசியாக உங்கள் சக்தியை விரயம் செய்யாமல் சேர்த்துவைத்துக் கொண்டால் நீங்கள் எந்த விஷயத்திலும் வெற்றியடையலாம்.

ஒருவருடைய சக்தி எங்தெந்த விதங்களில் சீர் குலைகிறது என்று 12-13 வருஷங்களுக்கு முன்பு மதுரைக் கல்லூரியில் சொன்னதை இங்கு குறிப்பிடுகிறேன்.

(9) All Colleges - Feb. 1953.

"As science students and as mathematicians, if you spend a little time using your knowledge attained in the colleges to find out what use there is in acquiring such a bad habit, how it is affecting the humanity bodily, mentally and financially, if you make such ordinary researches in your

daily routine activities, it will not be a difficult task for you to understand the ill-effects of such bad habits and eliminate them. When you understand how to eliminate the bad habits, what is remaining with you will be only good habits which will serve you as friends and help you throughout your whole walk of like.

I have to say a few words about cinema. You know while walking, thinking or doing a work a man has to spend his energy. When he is sitting quietly or sleeping, he conserves the energy acoording to the quality of food, habits and activities and enviromental conditions. Though I have not read in books or heard from others, I have found in my experience in sleep, instead of conserving power, at times we are losing that energy more or less according to the environments. I won't be able to tell you openly the actual experience I had in this short time. But I will tell you how the most valuable energy is wasted without a pie of value. That power is worth even the whole world or life. As a synthetic example, I give some figures.

Suppose we eat our ordinary rice without any strong taste, we spend one unit of energy. But if we eat with chillies or spices or with extreme sweet thing, we may spend

two units. If we walk without any intention or without anything in our mind, we spend 5 units but if we run to catch a train or bus we may spend 10 units. If we run to win a race or if we run with a fear to escape from a danger or if we run with anger or vengeance to do something somewhere, we spend 50 units. If we read an ordinary subject in a book, we may use 3 units but if we read an important subject relating to science or mathematics we may spend 10 units. When you write in the examination on the same subjects, you spend 25 units. When you are thinking about yesterday's work, you are spending 7 units, but when you are working a sum in mathematics or solving a problem of science read in books one or two years back, you are spending 30 units. In ordinary conversation with an ordinary man you are spending 2 units; but when you have conversation with a friend or with father or mother and when you are explaining truths, you are spending only 5 units. But when you are talking with one of your enemies (none should have enemies) with anger or when you are telling a lie to your principal, professor or in the court, to your parents or friends, you are spending 25 units. But the same lie if you speak with others, it will take only 10 units. When you are smelling a Rose flower, you are spending one unit of

energy, but when you smell Manoranjitam or a Durian fruit, you have to spend 20 units. When you hear a talk by a child or a talk by an ordinary friend, you have to spend 2 units but when you are hearing a rubbish talk from a thief or threatening words from rowdies or gangsters, you are spending 20 units. When you hear a bullet noise or when you hear the roaring of a lion coming towards you, you have to spend 50 units.

When you are seeing an ordinary house or ordinary furniture, or when you are seeing ordinary people walking in the street, you are spending 2 units but when you see nice books or friends and parents and when you see a fine mathematical instruments or scientific apparatus, you are spending 10 units. When you see books or scientific instruments spoiled by somebody or when you see your own parents or friends who are suffering from something or other, then you are spending 20 units.

While this is the figure for the power units spent on different occasions, we want to see how many units are spent by men on women and women on men. When a man is seeing very young girls or a very old woman, he is spending 2 units, but when he sees a woman of his age, he spends

5 units or perhaps 10 units. But if he is married, when he sees his wife he spends 5 units. Now I want to tell you something briefly bearing on the above data. When a man sees a woman with attraction, he spends 25 units; when he hears her, another 25 units; when he talks to her, another 25 units, when he thinks of her he spends 100 units and any activity will consume 200 units. Even if he thinks and enjoy in the dreams, he spends 400 units. This applies to the opposite sex as well.

All these data apply only to the age group between 15 and 30 years. Then between 30 to 45 years of age, there may be increase in some cases and decrease in some others. Beyond these years, there will be decline in spending but not with much defect. There are some means to stop the heavy drains and bring to a possible minimum. This can be done only by a strong will power, In this respect, the worst enemies for our youngsters are the present day cinemas. Even if anyone goes and sees personally any girl or boy with any kind of attraction, the loss is not so much, but cinemas give double or triple or fourfold loss. You may ask me how? Suppose there are 10 persons sitting here. If a woman walks in front of us with

attractive dress, can we stare at her continuously until she passes out of our sight? I am sure none can do so. Perhaps we may look at her first and then we will turn to the other side because we fear that others will look at us and will mock at us for this unmannerly thing. Now take the cinema. When we are in the darkness of the theatre facing the screen sitting one behind the other, we have the best chance to see the girls or boys on the screen continuously without closing our eyelids. Here there is no fear of anyone looking from the sides whether he is seeing the star continuously or not. Unfortunately our country produces pictures showing girls in attractive dresses and jewels or almost nacked with attractive songs giving chances to see them for a very long time continuously. You can imagine how much energy you are spending here in sheer waste. You have to calculate the energy spent. It is twice as much as it is on other activities. Not only there is this loss of energy, but also there is loss of something more when they indulge in night and day dreaming. As I mentioned before, seeing and thinking in dreams will cause double loss of energy in addition to nervous debility and insomnia. While you are trying to conserve your energy, you are losing one half of the amount of energy. Imagine what kind of effect it will

produce in your system physically and mentally if you continue seeing such nasty things.

I think no bacteria or germs can cause so much danger as is caused by seeing films which will consume very valuble energy which can face any disease or troubles and which can help humanity in any circumstance. This is the wealth of diamond and gold to be conserved by all youngsters which cannot be exhausted by spending in proper way. By this conservation one can control any disease, one can win the enemy, one can control the poison and poisonous animals, one can control dogs and other animals. There is nothing in the world that cannot be controlled by this conserved energy.

நீங்கள் இன்று இந்தக் கூட்டத்தில் இன்னும் ஒரு ஆண்டுக்கு எந்தக் கூட்டமும் போடுவதில்லை, எந்தக் கிளர்ச்சியிலும் கலந்துகொள்வதில்லை என்று ஒரு தீர்மானம் போட்டு நான் சொல்லும் ஒரு சில கருத்துக்களை பின்பற்றினால் ஹிந்தி இங்கு ஒருக் காலும் எட்டிப்பார்க்காது என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு
(முகவை மாவட்டம்)

Karaikudi,
2-11-66.

மதிப்பிற்குரிய "விஞ்ஞானமேதை" அவர்கட்கு
பணிவுடன் வணக்கம்

வருகின்ற நவம்பர் திங்கள் 26-27-ம் நாள் (சனி, ஞாயிறு) மாணவர் மாநாடு நடக்கவிருக்கிறது. (காரைக்குடி).

கடந்த இரண்டு மாநாடுகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்ததுபோல இம் மாநாட்டிலும் தாங்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறது.

எப்பொழுதும் மாநாடு நடத்துவதில், தாங்கள் பிரயோஜனம் ஏதும் இல்லையென்று பதில் இரண்டு மாநாட்டிற்கும் எழுதி உள்ளீர்கள்.

"தீர்மானம் போடுவது அரசாங்கம் அலட்சியப் படுத்துவது உண்மை" என்பதை உணர்கிறது.

எனினும் தங்கள் போன்ற மேதைகளின் அறிவுரைகளால் மக்கள் பயனடைவர்; அரசாங்கத்தின் கொடுமைகளை தங்கள் உரை மூலம் உணர்வர் என்ற நோக்கத்துடன் தாங்கள் கட்டாயம் 26, 27-ல் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள் மேலான ஒப்புதல் (பதிலை) விரைவில் எதிர்பார்க்கிறோம்,

வணக்கம்,

இங்ஙனம்,

மாநாட்டுப் பொறுப்பாளர்,

(Sd.) ஜீவா கலைமணி

தொடர்பு முகவரி:

சீவா கலைமணி, பி. ஏ.
எச். பி. எம். இல்லம்,
செக்காலை, 2-வது தெரு,
காரைக்குடி-2.

The Industrial Labour Welfare Association Ltd.,

Dated: 8—11—66.

Dear Friend,

I thank you for your letter dated 2—11—66 and note that the conference of the Students' Anti Hindi Agitation will be held on the 26th and 27th November 1966 at Karaikudi.

As you are aware, I have been advising the students not to take part in such agitations and not to take part in any political meetings and that they should devote their full time to their studies and be disciplined. The students should build up their character and try to maintain their health by conserving their energy during their young age.

Anti Hindi Agitation, or Agitation for Steel Factory or Agitation for separation of Andhra State, Madras State etc., or any agitation for price control, cow slaughter and as Sri Bhaktavatsalam mentioned any expected agitation for Salem Steel Plant etc. all these agitations to be left for the political people and other elderly persons. I have been telling the students and other youngsters that until their 25 years of age they should learn, for the next 25 years they should earn and then during the third

25 years to spend their knowledge and wealth.

Perhaps if they were to earn enormous wealth during the 2nd 25 years, they can enter into Politics. In the meanwhile by some reason or other or by bad environments if they become useless cracks, if they cannot live by any other means, such people also can enter Politics. Even such people if they are healthy, there are places in the Army and other constructive and useful places.

But students should not enter by any reason in such activities. Hence I advise you to cancel this conference and declare that no such conferences will be held hereafter.

I am not writing this to support Hindi or any other present foolish activities of the Government. Though I was supporting Hindi about 30 years ago, I am a very strong agitator in South India against Hindi as would be seen from my speeches even 15 years back in Salem, and my recent speeches in Madras, Thiruchirapalli and Tanjore.

Unfortunately this Government is very weak and if anybody wanted any work

from the Government if they agitate by a meeting, fasting, strike, or procession the Government is yielding. On account of this practice as well as improper education and allowing more time to waste in the colleges and interference of very bad political agents in addition to cinemas, tobacco and nasty publications students' indiscipline has grown and such agitations have been started now. Government say we will control the corruption, we will control vandalism, we will control the prices and we will control everything. When they start this inefficient controls full of uncontrolled actions have grown. When there is no fund how can any Government have steel plants everywhere. Our Prime Minister Smt. Indira Gandhi honestly said that no funds for starting steel factories. It is true we are getting foreign loans even for our food. But she has forgotten that no funds for designing of Bokara Steel Factory 2 crores and no funds more than 600 crores for Bokara Plants, perhaps she could have told instead of Bokara Plants 10 or 15 small factories (such as Balasundaram's Textool Steel Factories) can be located in 10 or 15 places, to satisfy all states.

In my opinion any more big factories such as any more steel factories or any more

bread factories, any more flour factory or rice mills are dangerous and would create heavy unemployment. I am always for Small Industries which will be economical efficient and would give more employment. The Government are just not understanding these points. But on account of very bad planning the Government is suffering and are becoming slaves to other countries. Because of the madness of the Planning Department, because of the madness of the Government following the Planning, India has become debtors to other countries, even to small countries such as Japan, Switzerland, Denmark and pumping our blood to other countries through jet pumps in the name of collaboration and becoming debtors to other countries which we cannot repay for several generations, perhaps which we may ask to disallow and to treat as free gifts in the very near future.

Lastly the worst action taken by the Government is the Devaluation, which they say to get more foreign exchange and to export more. This is a very big story. No country will devalue their own currency, but any country will make their currency a costilier one. In the name of foreign exchange and more export India has done devaluation but in fact less foreign exchange and less export. We did not

know why we want foreign collaboration when we have all facilities in our country itself.

As Sir C. V. Raman said we must do the first thing first and last thing in the last. But our Government is doing the Agriculture the foremost thing in the last and the last thing big steel factories and steel plants as the first thing in a topsy-turvy way.

As I told in 1960 at a meeting in Taj Mahal Hotel, Bombay unless the Planning Department is scraped, India cannot live or face the other countries. Now the Election is coming. The Congress may win because they have got crores and crores of Black money. Even if they win they cannot stand in 1968 or 1969 on account of the faults in Devaluation and planning. Perhaps the other parties may come with their open eyes to rule India properly. But if the Government is not allowing the Army to take over, there may be chances for the communists to ruin our country.

More than 15 years ago I gave the advice in the same place in Mr. Alagappa Chettiar's College the same views to the students in my speech which was started at 2 P. M. and ended at 6–45 P. M. In that

speech I mentioned that till then the parents were No. 1 enemy for the youngsters and from that time Dr. Alagappa Chettiar, Dr. Raja Sir Annamalai Chettiar and such philanthropists who opened the colleges were No. 1 enemies and parents No. 2 enemies.

From now I have to tell that No. 1 enemies are the Government, No. 2 enemies are the so-called philanthropists who finance Arts Colleges, Engineering Colleges and particularly Medical Colleges, then the parents come as No. 3 enemies.

I don't want to drag in Politics in this letter. If you still want to hold the conference and if you still want me to go over there to address the students, I have no objection to come and to insist my views in the conference.

Expecting your reply for all particulars.

Yours Sincerely,
(Sd.) G. D. Naidu.

To
Sri Jeeva Kalaimani, B. A.
H. P. M. Illam,
Sekkalai 2nd Street,
Karaikudi-2.

தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு
[முகவை மாவட்டம்]

Tamilnad Students Anti-Hindi Agitation Council
(Ramnad Dt.)

Karaikudi,
21—11—66.

பெருமதிப்பிற்குரிய அறிவியல் மேதை அவர்கட்கு
பணிவுடன் வணக்கம்,

தங்களுடைய மேன்மை மிக்க பதிலைக் கண்டோம். மாநாட்டில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மதியழகன், அப்துல் சமீது, மாரிசாமி, 'முத்தமிழ் காவலர்' கி. ஆ. பெ., டாக்டர் இலக்குவனார், கிருட்டினசாமி பாரதி, ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர், தங்களின் வருகையையும் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிப்பதையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

வணக்கம்.

இங்ஙனம்,

வரவேற்புக் குழுத் தலைவர்.

(ஒப்பம்) ....

Printed at
U. M. S. POWER PRESS
COIMBATORE.